ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2176/15 - 2020 මැයි මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.05.21
*2176/15 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்**

*66அ (1) (அ) என்னும் பிரிவின் கீழ் மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்*

*மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி, கேட்டு விலகியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்ற தாதலாலும்;*

*மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ், மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் 10 ஆம் இலக்க தாந்தாமலை வட்டாரத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட திரவியம் ஷன்ஷஜன் என்பவர் அங்கம் வகிக்கின்ற சுயேச்சைக் குழுத் தலைவர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும், அக்குழுவைச் சேர்ந்தவருமான மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் இலக்கம் 10 - தாந்தாமலை வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;*

*மேலே கூறப்பட்ட சுயேச்சைக்குழுத் தலைவரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக பாக்கியராசா பாஸ்கரன் என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்;*

*இப்போது மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் இராஜேந்திரா சசீலன் ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1)(அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு பாக்கியராசா பாஸ்கரன் என்பவரை மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் இலக்கம் 10 – தாந்தாமலை வட்டார உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*ஆர். சசீலன்,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*மண்முனை தென்மேற்கு பிரதேச சபை.*

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*மட்டக்களப்பு,*
*2020, மே 20.*

*6-02*

1A - G 32254 — 27 (2020/05) *இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*